முற்பகல் 10-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அண்ணன் அவர்கள் மிகவும் பின்தங்கிய பகுதியான கே.வி. குப்பம் பகுதியிலே ஓர் அரசு மகளிர் கல்லூரி தேவையென்று சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கலந்து பேசி, உரிய முடிவுகள் எடுப்பதற்கு ஆவன செய்யப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 155, மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

155—

அங்கன்வாடி மையம்

***2973—திரு. உ. மதிவாணன்:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) *கீழ்வேளூர் தொகுதி, கீழையூர் ஊராட்சி ஒன்றியம், வைரவன்காடு கிராமத்தில் அங்கன்வாடி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) *மற்றும்* (ஆ) *நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் சட்டமன்றத் தொகுதி, கீழையூர் ஊராட்சி ஒன்றியம், காமேஸ்வரம் ஊராட்சி, வைரவன்காடு கிராமத்தில் ரூபாய் 8 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பீட்டில் புதிதாக அங்கன்வாடி மையக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு விரைவில் திறக்கப்பட இருக்கிறது என்பதை*

2018 ஜுன் 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன் அவர்கள்.*

திரு. உ. மதிவாணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்வேளூர் சட்டப் பேரவைத் தொகுதி, காமேஸ்வரம் ஊராட்சி, வைரவன்காட்டிலே 400 குடும்பங்கள் வசித்து வருகின்றன. அவர்கள் அத்துணைபேரும் ஏழை விவசாயத் தொழிலாளர்கள். அவர்கள் விவசாயத் தொழிலுக்குச் செல்கிற நேரத்தில் இதுபோன்ற அங்கன்வாடி மையங்கள் இருந்தால் அவர்கள் தங்களுடைய குழந்தைகளை அங்கு ஒப்படைத்து விட்டுச் செல்வதற்கு வாய்ப்பாக இருக்கும்.*

இன்னொன்று, இந்தத் திட்டங்கள் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் மதிய உணவுத் திட்டத்தைக் கொண்டுவந்த நேரத்தில், பல்வேறு தடைகள் இருந்தபோது, 'யாசகம் எடுத்தாவது இந்தத் திட்டத்தை நான் நிறைவேற்றுவேன்' என்று பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் சொன்னார்கள். எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் இருந்த காலத்தில்தான் சத்துணவிலே வாரம் ஐந்து முட்டைகள் வழங்கப்பட்டன.

அங்கன்வாடி மையங்களை அமைக்க வேண்டுமென்ற வினாவை எழுப்பியதற்குக் காரணமே, எங்கள் ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தில் விவசாயத் தொழில்களுக்குச் செல்கிறபோது, இதுபோன்ற மையங்களில் தங்களுடைய குழந்தைகளை விட்டுச் செல்வதற்கு ஒரு வாய்ப்பாக அது அமைந்திருக்கிறது. ஒரு காலத்தில் ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொடுத்து, முதல் குழந்தை பிறந்துவிட்டால் அந்தப் பெண்ணுடைய வீட்டிலிருந்து அந்தக் குழந்தையைப் பார்த்துக்கொள்வதற்காக ஒருவரை அனுப்பி வைப்பார்கள். ஆனால், இன்றைக்கு இதுபோன்று அங்கன்வாடி மையங்கள் வந்த காரணத்தால், அந்தக் குழந்தைகளுக்கும், அந்த விவசாயத் தொழிலாளர்களுக்கும் ஒரு பாதுகாப்பு கிடைத்திருக்கிறது. எனவே, இந்தக் கட்டடத்தை இந்த அரசு கட்டி முடித்திருக்கிற நேரத்தில், எந்தத் தேதியில், எந்தத் நேரத்தில் இந்தக் கட்டடத்தை திறக்க இருக்கிறார்கள் என்பதை நான் தங்கள்மூலம் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிந்த பிறகு, நானே நேரில் வந்து அந்த அங்கன்வாடி கட்டடத்தைத் திறந்து வைப்பேன் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன் அவர்கள்.*

திரு. உ. மதிவாணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் மாவட்டத்திலே, என்னுடைய தொகுதியில்தான் அதிகமான அளவில் விவசாயத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள்.* (குறுக்கீடு) *என் தொகுதிதான் பின்தங்கிய தொகுதி.* (குறுக்கீடு) *நீங்கள் ஏன் குறுக்கீடு செய்கிறீர்கள்? எனவே, என்னுடைய தொகுதியில் இருக்கக்கூடிய பல்வேறு கிராமங்களில் அங்கன்வாடி மையங்கள் இல்லாததால், அந்த ஊராட்சியில் உள்ளவர்கள் இரண்டு அல்லது மூன்று கிலோமீட்டர் தூரத்தில் எங்கோ இருக்கக்கூடிய மையங்களைத் தேடிச் சென்று தங்கவேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதனால் எந்தெந்த ஊர்களுக்கு அங்கன்வாடி மையங்கள் தேவையென்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் பட்டியலை நான் அளித்திருக்கிறேன். இன்னும் சில இடங்களை அந்தப் பட்டியலில் சேர்க்க இருக்கிறேன். நான் பட்டியல் அளித்த பிறகு, அந்த இடங்களில் புதிதாக அங்கன்வாடி மையங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமைத்துக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதைத் தங்கள்மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் அங்கன்வாடி முதன்மைக் கட்டடம் அமைக்க வேண்டுமென்றால் 1,500 சதுர அடியிலிருந்து 2,000 சதுர அடி நிலம் தேவைப்படுகிறது. அதில், 600 சதுர அடியில் கட்டடமும், அந்தக் கட்டடத்தில் குழந்தைகளுக்காக ஓர் அறையும்,* store room *அதாவது*

2018 ஜூன் 8]

வைப்பறை. அதற்காகத் தனி அறையும், நவீனமயமாக்கப்பட்ட சமையல் அறையுடன்கூடிய 600 சதுர அடியில் அந்தக் கட்டடம் அமைக்கப்பட வேண்டும்.

அவை மட்டுமல்லாமல், ஓர் அங்கன்வாடி மையம் என்பது தேசிய முன்பருவக் கல்வி குழந்தை பராமரிப்புக் கொள்கை 2013-ன்படி, குழந்தைகளுடைய ஒருங்கிணைந்த வளர்ச்சியைக் கருத்தில்கொண்டு எழுச்சிமிகு குழந்தை வளர்ச்சி மையங்கள் அதாவது Vibrant Early Child Development Centres என்று சொல்லக்கூடிய அங்கன்வாடி மையங்கள் அமைக்கப்படுகின்றன.

முற்பகல் 10-55

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின்கீழ் ரூ.5 இலட்சமும், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூ.2 இலட்சமும் மற்றும் பிற நிதிகளிலிருந்து ரூ.1.50 இலட்சமும் சேர்த்து, தற்போதெல்லாம் கட்டப்படுகின்ற கட்டடங்கள் அனைத்திற்கும், அனைத்து வசதிகளையும் உள்ளடக்கிய அங்கன்வாடி மையங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, 2011-2012 ஆம் ஆண்டில், மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்தபடி, தமிழகத்தில் இருக்கின்ற 49,499 முதன்மை அங்கன்வாடி மையங்களும், 4,940 குறு அங்கன்வாடி மையங்களும், ஆக 54,439 அங்கன்வாடி மையங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அதில் 44 ஆயிரம் அங்கன்வாடி மையங்கள் சொந்தக் கட்டடத்தில் இயங்குகின்றன. மாண்புமிகு அம்மா அவர்கள் 15,313 அங்கன்வாடி மையங்கள் படிப்படியாக பல்வேறு நிதி ஆதாரங்களைக் கொண்டு கட்டப்படும் என்று சட்டமன்றப் பேரவையில் அறிவித்தார்கள். அதன்படி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய தலைமையில் இயங்குகின்ற இந்த அரசால், 10,141 அங்கன்வாடி மையங்கள் 599 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. 2,400 அங்கன்வாடி மையங்களுக்கு பல்வேறு நிலைகளில் கட்டடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர்ளின் அவர்களது தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து அவரவர்களுடைய சட்டமன்றத் தொகுதியில் அங்கன்வாடி மையங்கள் கட்டுவதற்கு நிதி ஒதுக்க வேண்டுமென்று அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

அரசாங்கம் கண்டிப்பாக அங்கன்வாடி மையங்களுக்கு முதன்மை முக்கியத்துவம் கொடுத்து, நிதி நிலைமைக்கேற்ப படிப்படியாக, மிக விரைவில் அங்கன்வாடி மையங்கள் தன்னிறைவு அடைகின்ற வகையிலே அம்மாவின் அரசு செயல்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 156, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்தரபாண்டியன், மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

156—

நேரடி நெல் கொள்முதல் நிலையம்

***8388—திரு. அ. சௌந்தரபாண்டியன்:**

மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) லால்குடி தொகுதி, லால்குடி, பூவாளூர் மற்றும் புள்ளம்பாடி ஆகிய பகுதிகளில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) நடப்பு நெல் கொள்முதல் பருவத்தில், திருச்சி மாவட்டம், லால்குடி தொகுதியைச் சேர்ந்த லால்குடி, பூவாளூர், புள்ளம்பாடி ஆகிய 3 இடங்களிலும் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு, மொத்தம் 1,001 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.